CETUK

ஈழத் தமிழர் பேரவை ஐ.இரா.

COUNCIL OF EELAM TAMILS U.K.

புலம் பெயர்ந்தாலும் தாயக விடுதலையே எங்கள் மூச்சு....

Press Release 2nd Edition
15th of May 2023.

**'இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் தொன்மையும் தொடர்ச்சியான இருப்பும் அரசியல் உரிமையும்'**என்னும் கருப்பொருளில் இன்று மதியம் 2 மணிக்கு, தமிழீழ போராட்ட வரலாற்றில் இணைந்திருக்கின்ற மூன்று தலைமுறை பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் தமிழீழ விடுதலைப்போரிலே வீரச்சாவடைந்த மாவீரர்களையும் சிறிலங்கா இந்தியப் படைகளாலும் இரண்டகர்களாலும் கொல்லப்பட்ட மக்களையும் நாட்டுப்பற்றாளர்களையும் நினைவு கூர்ந்து அகவணக்கத்துடன் மாநாடு ஆரம்பமானது.

நிகழ்வின் ஆரம்பத்தில் நிகழ்வை நெறிப்படுத்துபவர்களில் ஒருவரான பத்திரிகையாளர், ஊடகவியலாளர் மற்றும் ஆய்வாளருமான திரு பற்றிமாகரன் அவர்கள் ஈழத்தமிழர் பேரவை-பிரித்தானியாவின் நோக்கம் மற்றும் இம் மாநாடு நடைபெறுவதன் முக்கியத்துவம் தொடர்பாக அறிமுக உரையை நிகழ்த்தினார்.

அவரைத் தொடர்ந்து அனைத்துலகத் தமிழர் அவையின் தலைவர் பேராசிரியர் சிறி ரஞ்சன் அவர்களின் உரை " ஈழத் தமிழரை ஒரு தனி தேசமாக அங்கீகரிப்பதால் மட்டுமே இலங்கை அரசின் ஈழத்தமிழர் மீதான இனவழிப்பை நிறுத்த முடியும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். "முள்ளிவாய்க்காலில் திட்டமிட்ட இனவழிப்பை பல ஆதாரங்களுடன் இவ் அவைக்கு அவர் நினைவுபடுத்தினார். Boyle & Harrison என்ற இரு ஆய்வாளர்களின் ஆய்வில் இந்த நூற்றாண்டில் நடந்த பெரும் இனவழிப்பு ஈழத்தமிழர் இனவழிப்பென நியாயப்படுத்தினார். ஈழத்தமிழர் வரலாற்றை காலணித்துவக் காலத்தில் இருந்து, 1833ல் அரசியல் காரணங்களுக்காக இரு தேசங்களாய், இரு இனங்களாய் ஒரு தீவில் இருந்தவரை பிரித்தானியா ஒன்றாக இணைத்த வரலாற்றையும், 1947ன் பின் தொடர்ந்த தமிழ் இனவழிப்பு காரணங்களும் அதன் வெளிப்பாடாக விடுதலைப் புலிகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆதாரங்களுடன் கூறினார். ஈழத் தமிழரை ஒரு தனி தேசமாக அங்கீகரிப்பதால் மட்டுமே இலங்கை அரசின் ஈழத்தமிழர் மீதான இனவழிப்பை நிறுத்த முடியும் " என்ற முக்கிய கருத்துக்களை உள்ளடக்கி அவரது உரை அமைந்தது.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய, தமிழின அழிப்பின் உயிர் தப்பிய முள்ளிவாய்க்காலின் சாட்சியான செல்வி முகிலினி இலங்கை அரசின் இனவழிப்பு நிகழ்ச்சி நிரலில் பெண்களின் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவசியமான கருத்துக்களை முன்வைத்தார். முள்ளிவாய்க்காலில் நடந்த, உலகத்தில் வேறெங்கும் நடந்திராத அரக்கத்தனமான போர்க் குற்றங்களை கண்களால் கண்ட சாட்சியாய் பதிவு செய்தார். சொந்த பெற்றோரை, உறவுகளை ஆடை களைந்து கூட்டமாய் பாலியல் வல்லுறவு செய்ததை நேரில் கண்ட சிறுவர்களின் உணர்வையும் இந்த உலகம் உணரவில்லையே என்ற ஆதங்கத்துடன் அவரது உரையை நிறைவு செய்தார்.

8YE MARKET
SELSDON ROAD
SOUTH CROYDON
CR2 6PW

+44 7467 366 725

COUNCIL.ETUK2023@GMAIL.COM

அதனைத் தொடர்ந்து மொரீசியஸ் பல்கலைக்கழக சட்டவியலாளர் நரசிங்கன் அபிராஜன் அவர்கள் இலங்கையின் இனவழிப்பு: சட்டரீதியான குற்றவியல் நடவடிக்கைகளும் மக்களுக்கான பரிகாரமும் என்ற தலைப்பில் தனது உரையை நிகழ்த்தினார். ஈழத் தமிழரின் இனவழிப்பை உறுதி செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைக்கு அமைய, பிரித்தானியா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கருத்துக்களை அவர் பதிவு செய்தார்.

அவரைத் தொடர்ந்து இத்தாலி நாட்டிலிருந்து லக்சிகா இராமலிங்கம் அவர்கள் "தமிழர்களுக்கான கண்ணியமான தீர்வென இந்தியா முன்வைக்கும் 13 வது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கான அரசியல் இருப்பையோ தீர்வையோ தர முடியாதென்ற தலைப்பில் உரையாற்றினார். தமிழருக்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வாக தமிழர்களது நீதி, நிதி, காணி , விவசாயம், பொருளாதார கட்டுமானம் என அனைத்துப் பொறுப்புகளும் அரசு தலையீடு இல்லாமல் தமிழர்களிடம் கையளிக்க வேண்டும் என்னும் வேண்டுகோள் அவரது உரையில் உள்ளடங்கி இருந்தது.

புதிய உலக அரசியல் ஒழுங்கு முறையில் ஈழத்தமிழர்களின் முக்கியத்துவமும் ஐநாவின் பொறுப்புகளும் என்ற தலைப்பில் திரு அருஷ் பிரபாகரன் அவர்கள் உரையாற்றினார். உக்கிரையனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலே நடைபெறுகின்ற இனவழிப்புப் போராட்டத்தையும் ஈழத்தில் நடைபெறுகின்ற இனவழிப்பு போரையும் ஒப்பிட்டு பேசிய அதேவேளை உக்ரேனில் பத்தாயிரம் உயிர்கள் இழந்ததை தொடர்ந்து மேற்கத்திய நாடுகளும் ஐக்கிய நாடுகளும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் போர்க் குற்ற பகிரங்க கருத்துக்களும் பொருளாதார நடவடிக்கைகளும் ஏன் இலங்கையில் நூறாயிரத்தை தாண்டிய இனப்படுகொலையின் போது எடுக்கப்படவில்லை என்பதை பதிவு செய்தார்.

சொந்த மண்ணையும் மக்களையும் காக்க 100 ஆண்டுகளாய் போராடும் ஈழத் தமிழர் பிரிவினைவாதிகள் அல்ல; பயங்கரவாதிகள் அல்ல; உலகத்தில் அதீத மனிதாயத் தேவையில் உள்ள உலக குடிகள் அவர்கள், அவர்களை பாதுகாப்பது குறித்து ஐநாவின் பொறுப்புகளை குறிப்பாக அனைத்து உலக குற்றவியல் நீதிமன்றம் மனித உரிமை ஆணைக்குழுவின் கடமைகளையும் வலியுறுத்தினார்.

பிரித்தானிய தமிழ் கார்டியன் பத்திரிகையின் பத்திராதிபரான விருபன் நந்தகுமார் அவர்கள் இந்து- பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்திய புவிசார் அரசியலும் ஈழத்தின் கடல் பகுதியில் அமைவிட முக்கியத்துவமும் ஈழப் பிரச்சனைக்கான தீர்வும் என்னும் தலைப்பில் உரையாற்றினார். 13ஆம் திருத்தச் சட்டத்தை இலங்கையில் திணிப்பதற்கான இந்தியாவின் அரசியல் உள்நோக்கத்தை கேள்விக்கு உட்படுத்திய அவர், கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு இருக்கை மட்டுமே வென்றதை நினைவுகூர்ந்தார்.

ஏனைய அனைத்து இருக்கைகளையும் இழந்தது மட்டுமல்லாது அதன் தலைவரும் தனது இருக்கையை தோற்றார். அவர்தான் ரணில் விக்ரம சிங்கா. அவர்தான் இன்றைய பொருளாதார நெருக்கடியில் மக்களின் ஆணை இல்லாமல் ஆட்சியில் இருக்கும் இலங்கையின் ஜனாதிபதி. அவரின் எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கும்போது இனப்படுகொலை தீர்வுக்காகவோ இனப்பிரச்சனை தீர்க்கவுக்காகவோ அவரை எவ்வாறு நம்புவது என்ற கேள்வியுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

நிறைவாக டென்மார்க்கில் இருந்து உலகத் தமிழர் அமைப்பின் சார்பாக ரிசிகேசன் பாலசந்திரன் அவர்கள் ஆயுத அடக்குமுறை, பொருளாதார சிக்கலின் ஊடே ஈழத் தமிழரின் சுயாட்சிக்கான பாதை, கிழக்குத் தீமூர் ஈழத் தமிழருக்கு கற்றுத் தந்த பாடம் எனும் தலைப்பில் தனது உரையை நிகழ்தினார்.

1999இல் கிழக்குத் திமூர் நடத்திய பொதுசன வாக்கெடுப்பில் ஏகமனதான பெரும்பான்மையில் வென்று 2002ல் தன்னாட்சி செய்யும் தனி நாடாக பிரிந்தது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகள் அடையும் நிலையிலும் ஈழத் தமிழர்களின் தன்னாட்சி நிலையை ஏன் இந்த உலகம் ஏற்க மறுக்கிறது என்று ஒப்பீட்டு அறிக்கை ஊடாக ரிசி அவர்கள் கேள்வி எழுப்பினார். இனவழிப்புக்கான அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், இராணுவத்தினர் தமிழர் தேசங்களில் இருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும், உலகெங்கும் பரந்திருக்கும் உலகத் தமிழர்கள் இனப் பிரச்சினை தீர்வில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்றும், வட்டுக்கோட்டை தீர்மானத்தை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று தனது உரையில் வலியுறுத்தினார்.

இன்றைய மாநாட்டின் முக்கிய அம்சமாக பிரித்தானிய ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இம் மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக இனவழிப்பு நடைபெற்று வருவதனையும், அவற்றை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

பிரித்தானியா அமைதிக்கும் மனிதவுரிமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டாலும், சிறிலங்காவில் இவ்வாறு குற்றமிழைத்தவர்களுக்கு வேறு நாடுகளில் பயணத்தடை விதித்ததுபோல் பிரித்தானியாவும் செயற்படவேண்டும் என தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழுத் தலைவர் எலியட் கோல்போன் அவர்கள் வலியுறுத்தினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Barrie Gardner தொழிற்கட்சி ஆட்சிக்கு வரும்போது முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் மிலிபான்ட் நடந்துகொண்டது போன்று வினைத்திறனுடன் செயற்படும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

ஈழத் தமிழர் பேரவை ஐ.இரா.
COUNCIL OF EELAM TAMILS U.K.
CETUK
புலம் பெயர்ந்தாலும் தாயக விடுதலையே எங்கள் மூச்சு....

ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான நிழல் வெளியுறவுத் துறை அமைச்சர் கேத்தரின் வெஸ்ட் அவர்கள் தனது உரையில், தொழிற்கட்சி சர்வதேச சுயாதீன விசாரணைக்கு ஆதரவளிக்கும் எனவும், குற்றம் புரிந்தோரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு ஆதரவளிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

பிரித்தானிய தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிபான் மேக் டொனால்ட் அவர்கள் உரையாற்றுகையில் கண்டா, ஐரோப்பிய ஒன்றியம், அமரிக்கா போன்ற நாடுகள் இனப்படுகொலையாளிகளுக்கு பயணத்தடை விதித்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகளை எடுத்திருந்தது ஆனால் பிரித்தானிய அரசாங்கம் அது தொடர்பான காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் தொழிற்கட்சி ஆட்சி அமைக்கும் நிலையில் தாம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முனைப்புடன் உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

அனைத்து பேச்சாளர்களும் தமது உரைகளை சர்வதேச சமூகத்திற்கும் அனைத்து தமிழ் மக்களுக்கும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் முன்வைத்த அதேவேளை தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க அணைத்து தமிழர்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையம் அவசரத்தையும் வலியுறுத்தினர்.

**நிறைவாக மாநாட்டின் உறுதிமொழி வாசித்தளிக்கப்பட்டதுடன் தமிழரின் தாகம் தமிழீழ தாயகம் எனும் தாரக மந்திரத்துடன் மாநாடு இனிதே நிறைவு பெற்றது. (file attached )**

குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டிற்கு பலவழிகளிலும் உதவி புரிந்து இம்மாநாடு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் முக்கியமாக ஊடகப்பரப்பினருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈழத்தமிழர் பேரவை -பிரித்தானியா

8YE MARKET
SELSDON ROAD
SOUTH CROYDON
CR2 6PW
+44 7467 366 725
COUNCIL.ETUK2023@GMAIL.COM